Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

மலர் 14
தேசிய தினசரி
இதழ் 40

யாழ்ப்பாணம் பங்குனி 8 ஸபா 5 செவ்வாய்க்கிழமை (21-3-72)

21 MAR 1972 UNDERGRADUATE LIBRARY

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
நகை. இரத்தினம்ஸ்
50, கன்னாதிட்டி, யாழப்பாணம்.

புதிய கணிதம் பற்றி ஆசிரியர்களுக்கு போதனை

இளம் தம்பதிகள் நஞ்சுக்குப் பலி!

வவுனியாவில் பரிதாப சம்பவம்

—நமது நிருபர் ரி. கே. இராஜலிங்கம்—

வவுனியா, திங்கள் வாழ்க்கை கசப்புற்றதால் இளம்குடும்பம் ஒன்று நச்சுத்திராவகத்துக்குத் தன்னை அர்ப்பணித்தது. இலட்சுமணன் (வயது 32), மனைவி நாகேஸ்வரி (18 வயது) ஆகிய இருவருமே இவ்வாறு நஞ்சுக்குப் பலியானவர்களாவர்.

கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அணைத்தவாறு இறந்து கிடக்கக் காணப்பட்டனர். மணமுடித்து மாதங்கள் ஒன்பதேயான இவ்விளம்தம்பதிகள் வாழ்க்கையில் வெறுப்புற்றதற்கொன்று செய்துகொண்டுள்ளனர்.

இம்மரணம் சம்பந்தமாக தலைமைச்சாரணை நடாத்திய நிரு எஸ். பத்மநாதன் முன்னிலையில் இறந்த வாலிபர் இலட்சுமணனின் தாயார் சாட்சியமளிக்கையில் தெரிவித்தாவது:

"பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாகவே இவர்கள் திருமணம் செய்தனர். இவர்கள் இருவரும் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தினர். வழமைபோல் வேலைக்குச்சென்ற இவர்கள் வீடு திரும்பவில்லை. எனது இரண்டாவது மகன் இரவு 8 மணியளவில் வந்து அண்ணனும் மனைவியும் இறந்து கிடப்பதாகத் தெரிவித்தார். அவசரஅவசரமாக இரவு இலுப்பையடிக்குளத்திலுள்ள வாடிக்குச்சென்று பார்த்தபொழுது மருமகள் உடுத்திருந்த சேலையில் இருவரும் ஒருவரையொருவர் அணைத்தவாறு இறந்து கிடக்கக்காணப்பட்டனர். இவர்கள் இறந்துகிடந்த இடத்திற்குப்பக்கத்தில் வாந்தி எடுத்த அறிகுறிகளும் நச்சுத்திராவக வெற்றுப்போத்தலொன்றும் காணப்பட்டது. இவர்களுக்கு எதிரிகள் எவரும் கிடையாது. வாழ்க்கையில் வெறுப்புற்றதாலேயே இவர்கள் மரணமாகியுள்ளார்களென நான் சந்தேகிக்கிறேன்'

இறந்தவர்களின் உறவினர்கள் நாகேஸ்வரும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணையதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினார்.

மட்டக்களப்பு கல்முனை பகுதிகளுக்கு நிபுணர் செல்வர்

கொழும்பு, திங்கள் கல்வியமைச்சு புதிய கணிதத்தில் நிபுணர்களான விரிவுரையாளர்கள் குழு ஒன்றை மட்டக்களப்பு கல்முனைப் பகுதிகளுக்கு அக்கணிதம் பற்றி விரிவாக ஆசிரியர்களுக்கு விளக்கிக் போதனை வழங்க அனுப்பிவைத்திருக்கிறது.

அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் இந்த விரிவுரையாளர்கள் புதிய கணிதத்தைப் போதிக்கும் முறைகள் பற்றி விசேஷ பயிற்சி வகுப்புகள் நடத்துவார்கள்.

இதைவிட வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் பின்தங்கிய இடங்களுக்கு இந்தக் கணிதவிரிவுரையாளர்கள் குழுக்கள் அனுப்பப்படவுள்ளன. மின்னேரியா, பொலநறுவா, அம்பாறை, மட்டக்களப்பு, கல்முனை, வதுளை ஆகிய இடங்களிலும் ஏனைய பின்தங்கிய இடங்களிலும் இக்கணிதத்தை போதிக்கத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒருவார விசேஷ பயிற்சியை மேற்படி விரிவுரையாளர்கள் அளிக்கிறார்கள்.

6ம் வகுப்பிலிருந்து இப்புதிய கணிதபோதனை ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வகுப்பில் இருந்து படிப்பிப்பதற்கான புதிய முறைகளிலேயே இவர்கள் பயிற்சியளிப்பார்கள். (ச)

இந்துமாக்கடலில் பிரி. — யு. எஸ். தளம்

இந்தியாவைப் போலவே இலங்கைக்கும் கவலை

கொழும்பு, திங்கள் இந்துமாக்கடலிலுள்ள டியேகோ கார்சியா தீவில் அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டு ராணுவத்தளம் உருவாக்கப்படுவது குறித்து இந்தியாவைப்போலவே இலங்கையும் கவலை கொண்டிருப்பதாக வெளிஉறவு இராஜாங்க அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த சமுத்திரத்தில் ராணுவ நிலைகள் ஏற்படுத்தப்படுவதனால் இந்திய துணைக்கண்டத்தின் அமைதி பாதிக்கப்படும் என மண்டல சார்பற்ற நாடுகளின் சார்பில் இலங்கையே முதன்முதலாக எழுப்பியது.

இலங்கையின் இந்தக் கருத்தை ஐ.நா. வில் இந்தியா ஆதரித்தது. இந்து சமுத்திரம் அமைதிப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படவேண்டும் என்ற இலங்கையின் தீர்மானம் ஐ.நா. பொதுச்சபையில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்துக்கமைய ஐ.நா. பொதுச்செயலாளர் இப்பொழுது வல்லரசுகளுடன் ஆலோசனைகள் நடத்தி வருகின்றார். பொதுச்சபையின் அடுத்தக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் தமது ஆலோசனைகளின் விபரம் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

கணவனை கொன்றதாக வழக்கு; மனைவி சிதம்பரம் விடுதலை!

(நீதிமன்ற நிருபர் கா யோகநாதன்)

யாழ்ப்பாணம், செவ்.

"சம்பவம் நடந்த அன்று இறந்தவரான கணவனும் எதிரியான மனைவியும் வயலிலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். மனைவி முன்னேயும் கணவன் பின்னேயுமாக அவசரமாக ஓடோடி வந்து கொண்டிருந்தார்கள்.

மனைவி கொலைவழக்கில் சாட்சியமளித்த தையல் நாயகி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜி. ஸி. வீரமந்திரி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் மல்லாகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் 11-ந் திகதி தமது கணவரான ஆறுமுகம் மதியாபரணத்தை கொலை செய்ததாக சிதம்பரம் என்னும் பெண்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் ஆர். ச. நம்பிரத்தினம் புரக்டர் ஆர். பி. சபாரத்தினம் புரப்டர் கே. குணரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகினார். எதிரிக்காக அரசசட்டவாதி புரக்டர் எஸ். எஸ். பிரான்சிஸ் ஆஜராகினார். முடிக்குரியதரப்பில் அட்வகேட் பெரேரா ஆஜராகினார்.

விடுதலையான சிதம்பரம்

தையல்நாயகி பர்வதசர்மா மேலும் குறிப்பிட்டதாவது:

இறந்தவர் எனது அயல்வீட்டில் பதினைழு வருடகாலமாக வசித்து வந்தார். எங்கள் குடும்பத்துக்கும் அவர் குடும்பத்துக்கும் அதிக தொடர்பிருக்கவில்லை.

நீதிபதி: ஏன் யோசனை?

சாட்சி: நாங்கள் பிராமண சமூகத்தவர்களாக வாழ்வதால் அங்கு போவதில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

குப்பிவிளக்கில்

பீடி பற்றியவர் எரிந்து மரணம்

வவுனியா திங்கள்

குப்பிவிளக்கில் பீடி பற்றவைக்க முயன்றவர் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானார். அறுபது வயதுடைய கப்பிரமணியம் செல்லையா என்னும் வவுனியா நகரசபை ஊழியரே இவ்விதம் பரிதாபமான முறையில் மரணமானவராவர்.

பீடிபற்றக் குப்பிவிளக்கை எடுத்த இவர்மீது எண்ணெய் சிந்தப்பட்டு நெடுப்புப்பற்றியதால் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானார். மரண விசாரணையின்போது இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் சாப்பிடுவதற்கு இவர் நள்ளிரவில் ஐயோ என அலறும் சத்தம் கேட்டு

(5-ம் பக்கம் பார்க்க

நாகம்ஸ் சினிமா

தினசரி 4-30 மணியும்
சனி ஞாயிறு 10-30
TOPAZ

தினசரி 6-30, 9-45
சனி ஞாயிறு 2-30
சந்திரலேகா
(புதிய கொப்பி)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
விஜயகுமாரி
நடித்த
டீச்சரம்மா

பவானி
மூலாம்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
ரகுவரன்- அஞ்சலிதேவி
நடித்த
பக்த பிரகலாதா

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஜெமினிகணேசன்
சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி

மனோகரா ஏ. வி. ராஜன் — புஷ்பலதா
[யாழ்ப்பாணம்] நடித்த
தினசரி 2-30 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
மகிழம்பூ

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 3 தினங்கள் மட்டும்
குத்து விளக்கு

24—3—72 வெள்ளி முதல் காண்பிக்கப்படும்
சிவாஜி கணேசன் நடிக்கும்
திருவிளையாடல்
ஏவிஎம் வழங்கி புத்தம் புதிய கொப்பி

ரணி (யாழ்ப்பாணம்)
தினசரி 2-00, 6-00
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலேசமாளி
இத்துடன்
பயங்கரமான இயக்கத்தின் முக்கிய காட்சிகள் 2-00 6-00 மணி காட்சிகளுக்கு மட்டும் 60 நிமிடங்கள் காண்பிக்கப்படும். பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
தினசரி காலை 10-30 இரவு 10-00
சிவாஜி-
கே. ஆர். விஜயா நடித்த
திருடன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ மக்கள்திலகம் எம். ஜி. ஆர்.
★ சரோஜாதேவி
★ கே. ஆர். விஜயா
நடித்த
சத்யா மூவிஸ்
நான் ஆணையிட்டால்
(புதியகொப்பி)

கூரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரிங்கில் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மிச்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு, பிள்ளைவு வசதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்புகொள்ளவும். ஓ. கண்ணுமணி, தே/பா, எல். சண்முகராசா 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4119

சோதிடம்

உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளை திகதிகளுடன் பெறுவதற்குக்கீழே வருமுகவரி. கைரேகை பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 வ. மாணிக்கம், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 4106

ஆயர்பாடி ராசிப்புத்தகம் புதுவருடம் சித்திரை தொடக்கம் 12 மாசப் பலன்களுக்கானது. யாழ்ப்பாணம், முனாப், படுத்தித்துறை, சாவகச்சேரி, வெடியரசன், பளை, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா, கொழும்பு என்னும் பல இடங்களில் கிடைக்கும். வாசிப்பவர் நன்மை பெறுவது திண்ணம். ஆயர்பாடி சோதிடர், தெல்லிப்பளை. 4103

நட்சத்திரம், வயது, பூராவெயர் குறித்து, 15 சதமுத்திரையுடன் உறைவலுப்பி பதில் பெறவும். இலவசமாகவே ஆருடம், ஞானவக்கிய வைத்திய சாலை, ஆதிநர் ந. சண்முகராஜா, ஜே. பி. கொக்குவில். 4084

கல்வி

Pitman Examinations 1972 மே மாதம் நடைபெற இருக்கும் பிற்மன் பரீட்சைகளுக்கு (வர்த்தக பாடங்கள்) விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 10-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கிளைகளுக்கும், விண்ணப்பப் பத்திரத்திற்கும் 25 சத முத்திரை அனுப்பவும். ஆதிநர், ஸ்ரீமீனாட்சி வர்த்தகக் கல்லூரி, 38, சோமசுந்தரம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 4168

REGAL (Jaffna)
Daily 5-00, 7-15 p.m.
Sat. Sundays 10 30 a.m.
Clint Eastwood
Telly Savalas
in
KELLY'S HEROES

தினசரி பி.ப 2-00, 9 45
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

யாழ். தியேட்டர்
(வாலிபேசன்துறை)
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 3-30
சிவாஜி - ஜெயலலிதா
தெய்வ மகன்

நியூ கலைஞகன்
இணுவில்
தினசரி காலை 4-45,
THE MAIN KAMPF
The terriflying true story
of Hidlers Reich

23-3-72 வரை
தினசரி 6-30, இரவு 10-00
ஷீலா நடித்த
செமீன்
(மலையாளம்)

இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம்

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு பின்வருவன வற்றை விநியோகிக்க நாடுகு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 3-4-72-ம் திகதி காலை 10 மணிவரை கேள்விச்சபை தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி இல.
S/B/Q/196/72

விபரங்கள்

3/4", 1/2", 1", 1 1/2", 2" அளவிலான பொறியால் நொறுக்கப்பட்ட கண்ணும்புக்கள்.
4", 12"—3" கண்ணும்பு சல்லிக்கல்.
கண்டாலங்கள் அல்லது நாளாந்தவேலிக் ஆற்றமண் குழிமண்.

கேள்விப் பத்திரங்களையும் விபரங்களையும் கீழே கையெழுத்திடப்பட்ட வரிடமிருந்து 29-3-72-ம் தேதி நண்பகல் 12 மணிவரை வழமையான வேலைநேரங்களில் ரூபா 200/- திரும்பப் பெறப்படும். கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 10/- திரும்பப் பெறமுடியாத கேள்விப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான விநியோக
காரியாதிகாரி
120, டபிள்யு. ஆர். டி.
ராமநாதன்மாவத்தை,
த. பெ. எண் 194,
கொழும்பு-2.
11-3-1972 4052

பருத்தித்துறை நகரசபை
கேள்வி கண்ணப்ப அறிவித்தல்
காலநீடிப்பு

வாகனங்கள் திருத்தங்கள், பத்திரவாளி கோவில் ஒழுங்கையில் கால் அமைத்தல், கற்கள் முதலிய கற்றவும் கேள்விப் பத்திரங்கள் கழங்குதல், ஏற்றுக் கொள்ளுதல் 27-3-72 பி.ப. 2 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வ. தர்மலிங்கம்
தலைவர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை.
18-3-72 4053

விற்பனைக்கு

நாவற்குழியில் கண்டி றோட்டிற்கு அருகாமையில் மின்சார, புகையிரத நிலையம், பஸ் நிலைய வசதிகளுடன் 20 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. திரு. பொ. நடராசா, பஸ்நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நாவற்குழி, அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 4169

3. H. P. Petrol Engine
மிகத்திறமானதும் நம்பகமான வேலைப்பாடுகளுடைய ஒரு சிறிய எஞ்சின். இது ஒரு எண்ணை அடிக்கும் 1" பம்புடன் கிளர்ணடாக இணைத்திருக்கிறது. வேறு விபரங்களுக்கும் இதைப் பார்ப்பதற்கும் மானிப்பாய் ஆஸ்பத்திரி ஒழுங்கை, 23 இலக்க வீட்டில் விசாரிக்கவும். 4170

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-40
சிவாஜி - பத்மினி
விடுதலை விடு

WANTED

Wanted photography with the knowledge of indoor and outdoor photography colouring and finishing good salary will be paid with lodging. wanted two dark room assistants with the knowledge of developing & printing in all varities of printing papers Contact personly or apply on or before 30-3-72 Studio PRINCESS Chunnakam 4208

சுற்றுப் போட்டி

புத்தளம், திங்கள்

கலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த செற்றிக் கேடயத்திற்காக நடைபெற்றவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் புத்தளம் நீர்ப்பாசன இலாகாவும், புத்தளம் பகிரங்க விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டபோது முதல் இன்னிங்ஸில் நீர்ப்பாசன இலாகா 36 ஓட்டங்களும் பகிரங்க விளையாட்டுக் கழகம் 53 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் நீர்ப்பாசன இலாகா 116 ஓட்டங்களும், பகிரங்க விளையாட்டுக் கழகம் 36 ஓட்டங்களும் பெற்ற நீர்ப்பாசன இலாகா வெற்றியீட்டியது

புத்தளம் நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு நடுவர்களாக திரு. ரமேஷ், திரு. பெர்னாண்டோ ஆகியோர் கடமையாற்றினார்கள்.

.....

முதல் வெற்றி

புத்தளம், திங்கள்

புத்தளம் மாவட்ட சாரணர் சிறிவு ஏரப்பாட்டுச் சுற்றுப்போட்டியில் புத்தளம் சென்ற் ஜோசப் 'பிரிகிரேஷன்' ஏரபத்தாட்டக் கழகமும், முதல் 'லக் பேட்ஸ்' ஏரபத்தாட்டக் கழகமும் போட்டியிட்டன. இப்போட்டியில் முதல் 'லக் பேட்ஸ்' கழகம் வெற்றியீட்டியது.

0 0 0

புத்தளம், திங்கள்

முதல் 'லக் பேட்ஸ்' ஏரபத்தாட்டக் கழகத்திற்கும், புனிதசாலைக்குளம் 'கிரசன்' ஏரபத்தாட்டக் கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் முதல் 'லக் பேட்ஸ் கழகம், புனிதசாலைக்குளம் 'கிரசன்' கழகத்தை இலகுவாகத் தோற்கடித்தது.

இப்போட்டி புத்தளம் வெல்லி ஏரபத்தாட்டமைதானத்தில் நடைபெற்றது. ஜனாப். சஹார்தீன் நடுவராகக் கடமையாற்றினார்.

.....

காட்டு அதிகாரிகள் தாக்கப்பட்டதாக வழக்கு

காலி, திங்கள்

மிகிலாவ காடுகளில் வைத்து காட்டு இலாகா உத்தியோகத்தர்களைத் தாக்கியதாக 18 பேர்மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உடுகம சர்க்கியூட் நீதிமன்றத்தில் காலி மாஜிஸ்திரேட் திரு. லக்ஸ்மன் வீரசேகரா முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. எதிரிகள் 18 பேரையும் தலா ரூ 200 பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் அனுமதித்தார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மிகிலாவ நோக்கிடத்தைச் சேர்ந்தவர்கள்.

கள்ளத்தனமாக மரம் வெட்டப்படுவதாகவும் பலகை அறுக்கப்படுவதாகவும் கேள்விப்பட்டு அங்கு சென்ற நான்கு காட்டு இலாகா அதிகாரிகள் தாக்கப்பட்டதாக இவ்வழக்கில் தெரிவிக்கப்படுகிறது.

"போரில் ஏற்பட்ட தோல்விக்கு யஹ்யாகான்தான் காரணம்"

70-ம் ஆண்டிலேயே எச்சரித்தேன் என்கிறார் அதிபர் பூட்டோ

புதுடில்லி மார்ச் 20

வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தானியர்களின் பாதுகாப்புக்கு ஷேக் முஜிபுர் ரஹ்மான உறுதியளிக்காவிட்டால் பாகிஸ்தானிலுள்ள வங்காளிகளை மணயமாக வைத்திருக்கப்போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜுல்ப் பூட்டோ அச்சுறுத்தியிருக்கிறார்.

லாகூரில் பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் இந்திய-பாகிஸ்தான் போரில் ஏற்பட்ட தோல்விகளுக்கு ஜெனரல் யாஹ்யாகான்தான் காரணம் என்று குற்றஞ்சாட்டினார். போர் ஏற்படுகிறபோது பாகிஸ்தான் முழுமையாகவே அழிந்துவிடும் என்று 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே தான் யாஹ்யாகானை எச்சரிக்கை செய்திருந்ததாக ஜுல்ப் பூட்டோ தெரிவித்தார்.

கட்டத்தில் இருந்தவர்கள் பெரும் கச்சிலிட்டுக் குழப்பம் செய்தார்கள் கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி ஜனாதிபதி கேட்டுக்கொண்ட போதிலும் அமைதி ஏற்படவில்லை ஒழுங்கீனமாக நடந்து கொள்ளாதீர்கள் என்று மக்களைப் பார்த்து அவர் கூறினார். கூட்டத்துக்கு வெளி நாட்டுத் தூதுவர்களும் வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி ஒழுங்காய் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். போரில் ஏற்பட்ட தோல்வி பாகிஸ்தான் மக்களுக்கு ஏற்பட்ட தோல்வியல்லவென்று அவர் சொன்னார்.

பாரதத்திலுள்ள பாகிஸ்தான் போர்க்கைதிகளை விடுவிக்கும்படி அவர் இந்தியாவைக் கேட்டுக்கொண்டார். பாகிஸ்தானுடனான தகராறுகளுக்கு பாகிஸ்தான் போர்க்கைதிகளைப் பணயப்பொருளாக இந்தியா வைத்திருக்காது என்று தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவும் அமெரிக்காவும் அளித்த உதவிகளுக்காக அவைகளை அவர் புகழ்ந்தார் வங்காள தேசத்தை அங்கீகரித்துள்ள நாடுகளை அவர் கண்டித்தார்.

மாக்கோவுடன் உறவு கொள்ளப் பலப்படுத்தித் தொடர்வே விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனால் இந்த உறவு வேறு நாடுகளுடனான உறவுகளைப் பாதிப்பதாகாது என்று அவர் சொன்னார்.

பிரி. மந்திரி பாக் விஜயம்

பிரிட்டிஷ் வெளி உறவு அமைச்சர் திரு அலெக்சாண்டர் ஹியும் அதிபர் பூட்டோவுடன் ஆலோசனை நடத்துவதற்காக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார்.

டெஹ்ரானிலிருந்து நேற்று லாகூருக்குப் புறப்படு முன்னர் திரு ஹியும் பத்திரிகை நிருபர்களிடம் பேசியபோது இந்தியாவுடனான பாகிஸ்தான் பிரச்னைகளில் பிரிட்டன் உதவ விரும்பும் ஆனால் நேரடியாகத் தலையிடும் நோக்கமில்லை என்றார்.

விமான விபத்து: 12 பிரயாணிகள் பலியாகினர்

ஏடன் மார்ச் 20

எகிப்திய கம்பனியொன்றுக்குச் சொந்தமான விமானம் ஒன்று ஏடனுக்கருகில் விழுந்து நொறுங்கியதாகவும் இதிலிருந்த பிரயாணிகளில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. வியாழக்கிழமை பிரயாணம் ஜெட்டாவிலிருந்து இந்த விமானம் புறப்பட்டதாகவும் ஏடனுக்கு அருகில் நொறுங்கி விழுந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த விமானத்திலிருந்த 9 சிப்பந்திகளின் கதிபற்றியும் ஒன்றும் தெரியவில்லை.

ஹிட்லரின் உதவியாளர் அல்லவாம்

டெல் அவிவ் மார்ச் 20

ஹிட்லரின் உதவியாளர் போர்மன் என்று கருதப்பட்ட நபர் போர்மன் அல்லவென்று போர்க்கைதிகளைக் கண்டுபிடிப்பதில் நிபுணரான அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் சிமோன் விசந்தால் கூறியிருக்கிறார்.

போர்மன் உயிருடனிருப்பதற்கான எதிர்த் ருவுமில்லை. அவர் இறந்துவிட்டதாகவும் நம்பவில்லையென்றார் அவர்.

ஹீத்-பொம்பிடோ ஆலோசனை

லண்டன், மார்ச் 20

பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு. எட்வார்ட் ஹீத்தும் பிரான்ஸிய அதிபர் பொம்பிடோவும் இரண்டு தினங்களாக நடத்திய பேச்சுவார்த்தைகளின்பின்னர் இரு நாடுகளுக்குமிடையிலான பல்வேறு விஷயங்களில் இருதலைவர்களுக்குமிடையிலுள்ள ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஐரோப்பிய கூட்டு அமைப்பின் வளர்ச்சி சம்பந்தமாக இருதலைவர்களும் பல திட்டங்களை ஆராய்ந்ததாகத் தெரிகின்றது.

அமெரிக்காமீது சூ-என்-லாய் சீற்றம்

ஹாங்காங், மார்ச் 20

இந்தோ சீனாவில் போரை தொடர்ந்து நடத்திவருவதாக அமெரிக்காமீது சீனப் பிரதம மந்திரி சூ-என்-லாய் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கம்போடியத்தலைவர் இளவரசர் சிஹனுக் சீனாவுக்கு வந்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளதை யொட்டி நடைபெற்ற கட்டத்தில் பிரதமர் சூ-என்-லாய் பேசினார்.

இந்தோசீனாவில் போரை நிறுத்தப்படுத்தியபடியாகவும் அமெரிக்காவை அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கம்போடியாப் பகுதியை பாகிஸ்தான் போர்க்கைதிகளை விடுவிக்கும்படி அவர் இந்தியாவைக் கேட்டுக்கொண்டார். பாகிஸ்தானுடனான தகராறுகளுக்கு பாகிஸ்தான் போர்க்கைதிகளைப் பணயப்பொருளாக இந்தியா வைத்திருக்காது என்று தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவும் அமெரிக்காவும் அளித்த உதவிகளுக்காக அவைகளை அவர் புகழ்ந்தார் வங்காள தேசத்தை அங்கீகரித்துள்ள நாடுகளை அவர் கண்டித்தார்.

மாக்கோவுடன் உறவு கொள்ளப் பலப்படுத்தித் தொடர்வே விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனால் இந்த உறவு வேறு நாடுகளுடனான உறவுகளைப் பாதிப்பதாகாது என்று அவர் சொன்னார்.

பிரி. மந்திரி பாக் விஜயம்

பிரிட்டிஷ் வெளி உறவு அமைச்சர் திரு அலெக்சாண்டர் ஹியும் அதிபர் பூட்டோவுடன் ஆலோசனை நடத்துவதற்காக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார்.

டெஹ்ரானிலிருந்து நேற்று லாகூருக்குப் புறப்படு முன்னர் திரு ஹியும் பத்திரிகை நிருபர்களிடம் பேசியபோது இந்தியாவுடனான பாகிஸ்தான் பிரச்னைகளில் பிரிட்டன் உதவ விரும்பும் ஆனால் நேரடியாகத் தலையிடும் நோக்கமில்லை என்றார்.

3 நாள் முத்தமிழ் விழா நடத்த முடிவு

குருநகர், திங்கள்

"பாரதி விழாக் கொண்டாடுவதற்கும் ஆண்டு முத்தமிழ் விழாவாகக் கொண்டாடுவதற்கும் தமிழர் கலைக்கழகம் வரச்சாலை யாப்புக் கழகம் தீர்மானித்துள்ளது. இவ்விழாவை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் மூன்று தினங்கள் நடத்துவதெனவும் கழகம் முடிவு செய்தது.

கழகத் தலைவர் வழக்குரைஞர் திரு சி. நாகராசா எம் எம் சி தலைமையில் நேற்று நல்லூரான் சம்பந்தர் ஆதீனத்தில் கூடிய மாநாட்டில் இவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு மேற்கு மாகாணங்களைச் சேர்ந்த பல மன்றங்களின் பிரதிநிதிகள் 100-க்கு மேற்பட்டோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இவ்விழா ஆலைப்பாணர்களாக மேற்படி கழக உறுப்பினர்களுடன் இம்மாநாட்டுக் கலந்து கொண்ட மன்றங்களின் பிரதிநிதிகளாக ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் இரண்டு பேர் விபரம் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்விழாவைமொட்டி விழா மலர் ஒன்றை வெளியிடுவதெனவும் மூன்றுநாள் நிகழ்ச்சிகளிலும் இயல்இசை நாடகம் ஆகிய அம்சங்களை அடக்கும் வகையில் கலைச் சார ஊர்வலமும், கண்காட்சி, சித்திரக்கண் காட்சிகளும், கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, நாடகப் போட்டி ஆகியனவும் பாரதி பாடல்களைப் போட்டிகளும், மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளும் இடம்பெறச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாரதி விழா

ஏழாலை, திங்கள்

ஏழாலையில் முதலாவது சமாதான நீதவானாகத் தெரிவு செய்யப்பட்ட பிரபல சமூக சேவையாளரான ஜனாப் ஏ. கே. மஹ்மூத் லெப்பைக்கு ஏழாலை பொது மக்கள் பாராட்டுவிழா ஒன்றை நடத்தினர்.

இவ்விழாவுக்கு மூதூர் முதல்வரும் தலைக் ஒலிபரப்பு உதவி அமைச்சருமான ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத், மெற்கிலங்கை கடதாசி ஆலை இயக்குனர்களில் ஒருவரும், ஏழாலை பல்லிய சபைத் தலைவருமான ஜனாப் எம் ஏ பி ஏ றஹ்மான், மட்டக்களப்பு மாநகர மேயர் திரு ஜே. தியாகராஜா, ஜனாப் எம் எம் சாலி (புரக்கிக்கமால்), ஏழாலை அதிபர் மாவித்தியாலய அதிபர் ஜனாப் பூ. எல் நாஸூத் ஆகியோர் ஜனாப் ஏ கே மஹ்மூத் லெப்பையின் சேவைகள்.

வரட்சி குறைந்தது

கொழும்பு, திங்கள்

கடந்தசனியன்று பரவலாக மேல்நாடுமழையின் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த வரட்சிநிலைமை ஓரளவு குறைந்துள்ளது.

நாட்டின்பலவிடங்களிலும் இருந்த கிடைத்த தகவல்களின்படி அதிகமழை பெய்துள்ள இடங்களின் விபரம் வருமாறு:

கட்டுநாயக்க 1.04 அங்குலம். அனுராதபுரம் 1.05 அங்குலம், எம்பிலிப்பிட்டியா 1.31 அங்குலம், இரத்தினபுரி 1.02 அங்குலம் பரந்தன் 1.01. மற்றும் பல இடங்களிலும் சிறுமழை பெய்திருக்கின்றது. என்றாலும் வரட்சி முழுமை நீங்கி விடவில்லையாம்.

பணம் ஒதுக்கீடு

குருநகர், திங்கள்

யாழ்ப்பாணத் தொகுதியைச் சேர்ந்த நல்லூர் ஸ்ரீ கிருஷ்ணன்வரித் நியாயம் குருநகர் சென்றோக் கித்தியாசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கும் கட்டிடம் கட்டுவதற்கென 35 ஆயிரம் ரூபாய் கல்வி இலாகாவினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கிறீன்வர கித்தியாசாலைக்கு 15 ஆயிரம் ரூபாவும் சென்றோக் கித்தியாசாலைக்கு 20 ஆயிரம் ரூபாவும் பிரிக்கப்பட்டுள்ளது.

தியாகராஜ பாகவதர் நினைவு விழா

குருநகர், திங்கள்

காலஞ்சென்ற திரு எஸ். கே. தியாகராஜபாகவதரின் நினைவுவிழா ஏப்ரல் 9ம்திகதி கடுவில் கலையகத்தில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை கன்னகம் 'ஆனந்த' நாடக மன்றம் செய்துவருகின்றது. தியாகராஜ பாகவதரின் உருவப் படத்திரைநீக்கத்துடன் ஆரம்பமாகவிருக்கும் இவ்விழாவில் வடஇலங்கையின் கலைஞர்கள் பலர் சொற்பொழிவாற்றவிருக்கின்றனர். இதைத்தொடர்ந்து பாகவதரின் கழிலாசிகை மகிய 'ஆசோக்குமார்' நாடகமும் இடம்பெறவிருக்கின்றது.

பஸ் பிரயாணிகள் சங்கம்

கல்கியங்காடு திங்கள்

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாண - அச்சுவேலி இரச்சலாத பஸ் பிரயாணிகள் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. மு. பூபாலசிங்கம், உப தலைவர்: திரு. வே. செல்வத்துரை, செயலாளர்: திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை, உப செயலாளர் திரு கி. பவளசேகரன், பொருளாளர்: திரு. ப. சின்னத்துரை.

ஆறு பேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

குடாவில் கிளர்ச்சியாளருக்கு பொதுமன்னிப்பு

வாஷிங்டன், மார்ச் 20

குடாவில் கடந்த 16 ஆண்டுகளாக கிளர்ச்சியில் ஈடுபட்டுவந்துள்ள புரட்சியாளர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு அளிக்க அதிபர் நிமேரி முடிவு செய்திருக்கிறார். இப்பொழுது சிறைகளில் இருக்கும் புரட்சிக்காரர்கள் அனைவரையும் விடுவித்து அங்கே பிரதேசங்களுக்குச் செல்வதற்கு அவர் அனுமதி வழங்கியிருக்கிறார்.

இடமாற்றமும் நியமனமும்

பருத்தித்துறை, திங்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. எம். சண்முகநாதன் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இதே கல்லூரியைச் சேர்ந்த திரு. சி. துரையரசா பண்மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் திரு. வே. நடேசபிள்ளை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆனைப்பந்தி குருநாத சுவாமி வித்தியாலய ஆசிரியர் திரு வே. மகேசன் பூநகரி செம்பியன் குன்று அரசினர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திட்சை பெற்றனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

புலிகுடுதீவு பெருங்காடு ஸ்ரீ கிராஞ்சியம்பதி ஸ்ரீமீனாட்சி சோமசுந்தரேஸ்வர சுவாமிகோயில் மண்டபத்தில் 98 பேருக்கு ஆண்மையில் சமயதீட்சை அளிக்கப்பட்டது. வரணி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ செல்வத்திநாதக் குருக்கள் கிளிவநாதக்குருக்கள் ஆகியோரால் தீட்சை அளிக்கப்பட்டது.

சிரமதானம்

மாவிட்டபுரம், திங்கள்

தொல்புரம் அரசினர் அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலை வளவு கூவும், கட்டிடங்களையும், மற்றும் பகுதிகளையும் தொல்புரம் மத்திய சனசமூகநிலையத்தாரும் பாடசாலை மாணவ மாணவிகளும் சிரமதான முறையில் திருத்தியமைத்தனர்.

தொல்புரம் சனசமூக நிலையத் தலைவர் திரு. சி. சிவகுப்பிரமணியம் தலைமையில் இச்சிரமதானம் நடைபெற்றது.

தலைமையாசிரியர் இடமாற்றம்

வாழ்ப்பாணம், செவ்வாய்

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த இராமநாதபுரம் கிழக்கு அ. த. க. பாடசாலையிலிருந்து முதலாந்தர தலைமையாசிரியரான திரு. செ. திருநாவுக்கரசு சங்குவேலி அ. த. க. பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அ. இ. அரசினர் பாடசாலை

தமிழாசிரியர் சங்கம் தீர்மானம்

மானிப்பாய், திங்கள்

'வெளிமாவாண கிளிக் கடலைபுரியும் தமிழ் ஆசிரியர்களுக்குச் சிறைவாசத்தில் கடிதம் அனுப்பப்படுவதால் அவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். ஆதலால் அப்பகுதி ஆசிரியர்களின் வசதியை முன்னிட்டு சிறைக் கடிதங்களுடன் தமிழ்மொழியெழுத்து அனுப்பவேண்டும்'.

இவ்வாறு பிராந்தியக் கல்வியதிகாரிகளைக் கோரும் தீர்மானமொன்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கத்தில் கட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வாழ் நாவலர் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர்களை எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்னைகள் குறித்தும் தமிழ் ஆசிரியர் சமூகத்துடன் இச்சங்கத்தை இணைத்து ஒரு சங்கமாக்குவது பற்றிய அமைப்புவிதிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றொரு தீர்மானம் வருமாறு:

வெளிமாவாண கிளிக் கடிதமுறைத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு தமிழ் ஆசிரியர்கள் இல்லாமையால் பாடசாலைகளை மூடவேண்டியுள்ளது சிலாபப்பகுதியில் கடிதத் தொடர்பான ஆசிரியர்கள் இல்லாதிருக்கின்றனர். இதே சமயத்தில் சிலாபநகரப் பாடசாலைகளில் கடிதத் ஆசிரியர்கள் உள்ளனர். கிராமப்பகுதிகளுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் உள்ளது. இதுகுறித்து சிலாபம் விதிவாதிபதியைக் கண்டு பேச்சுவார்த்தை நடத்துவது'.

வலி. வடக்கு ஆசிரியர் சங்க

பேச்சு, சங்கீதப் போட்டி முடிவுகள்

உடுவில், திங்கள்

வலி-வடக்கு ஆசிரியர் சங்கம் பாடசாலைகளிடையே நடாத்திய பேச்சு, சங்கீதப் போட்டி முடிவுகள் பின்வருமாறு.

தமிழ் பேச்சு (பெண்கள்)

கீழ்ப்பிரிவு: வி. விஜயராணி முதலிடமும், எஸ். சௌந்தரமாலதி மகாஜனாவும் ஜனாமினி யூனியன்

மத்திய பிரிவு: கே. விமலாதேவி, பி. மேகலா, எஸ். பரமேஸ்வரி மகாஜனா

மேற்பிரிவு: வி. பத்மராணி, எஸ். ஜெயலக்ஷ்மி மகாஜனா, கே. ஸ்ரீரங்கம் ஆரணோதயா.

சிறப்பு மேற்பிரிவு: எஸ். மிராவினி, ப. செல்வராதேவி மகாஜனா, வி. சிவமகேஸ்வரி யூனியன்.

ஆண்கள் கீழ்ப்பிரிவு: டெரமினிக் சவிரியோ சென் தொமினிக்ஸ், எஸ். முரளிதரன் நடேஸ்வரா, கே. முகுந்தன் மகாஜனா.

மத்திய பிரிவு: எஸ். தனபாலசுந்தரம் மகாஜனா, எஸ். ஆர். மொன்போர்ட் சென் தொமினிக்ஸ், எஸ். சுமனதாஸன் மகாஜனம் இந்து.

மேற்பிரிவு: எஸ். தயாபரன் மகாஜனா, எஸ். சிவபாலன் மகாஜனா, வி. பாலகிருஷ்ணன் ஆரணோதயா.

சிறப்பு மேற்பிரிவு: கே. ஆனந்தநாதன் யூனியன், எம். இராமேஸ்வரன் நடேஸ்வரா, கே. குகநேசன் மகாஜனா

ஆங்கிலப் பேச்சு பெண்கள்:

கீழ்ப்பிரிவு: ஆர். மலர்விழி, எஸ். சிவசுமனா, ஏ. ஸ்ரீபாமினி மகாஜனா.

மத்திய பிரிவு: எஸ். தயாவினி யூனியன், வி. செல்வராணி, பி. மேகலா மகாஜனா

மேற்பிரிவு: ஏ. ஜசுமின் ஆர் இவ்பம் இளவரசி சென் தொமினிக், ஆர். ராஜ் செல் யூனியன்

சிறப்பு மேற்பிரிவு: ஏ. இந்திரமதி, எஸ். மிராவினி, கே. சிவசாமி மகாஜனா

ஆண்கள் கீழ்ப்பிரிவு: பி. மனோசமூர்த்தி, எஸ். மனோகரன் மகாஜனா என். மகேஸ்வரன், ஏ. சிவகுமாரன் இந்துக்கல்லூரி.

மத்திய பிரிவு: எஸ். செந்தில்மேகன், ஆர். செல்வஸ்தன் மகாஜனா, வி. எம். ஸ்ரீ இந்துக்கல்லூரி

மேற்பிரிவு: எஸ். சிவபாலன், எஸ். ஆனந்தகுமார், இ. ஆர். சாந்தகுமார் மகாஜனா.

சிறப்பு மேற்பிரிவு: பி. அரவிந்தன் ஸ்ரீ இந்துக்கல்லூரி, எஸ். தயாபரன் மகாஜனா, எம். சுப்பிரமணியம் யூனியன்

வடஇலங்கை ஹோமியோபதி சங்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடஇலங்கை ஹோமியோபதி சங்க நிர்வாகசபைக் கூட்டம் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் யாழ்ப்பாணம் ஐந்தாம் குறுக்கு வீதியிலுள்ள ஹோமியோ வைத்தியசாலையில் நடைபெற்றது. டாக்டர் சாமுவேல் ஹனிமானின் பிறந்தநாள்விழாவை ஏப்ரல் மாதம் கொண்டாடுவதென்றும் ஹோமியோபதியின் முன்னேற்றத்துக்கு 'ஹோமியோவைத்தியன்' என்ற சஞ்சிகை ஒன்றைத் தொடர்ந்து வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நீர்வேலிபுரம் குடியேற்றத் திட்ட கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சமீபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜே. எஸ். பிரடெறிக் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் புது நிர்வாகத்திற்கு தலைவராக திரு. ப. சண்முகம் செயலாளராக திரு. க. சபாரத்தினம், பொருளாளராக திரு. க. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இசைவிழா நிகழ்ச்சிகள்

ஒடுவூர், செவ்வாய்

இளம் கலைஞர் மன்றத்தின் இசைவிழாவின் இரண்டாம்நாள் இன்னிசை நிகழ்ச்சிகளுக்கு வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமைதாங்குகின்றார்.

மாலை 5-30 மணிக்கு— செல்விகள் கலாநாயகி சிவனந்தம்பி, தேவிகாராணி குமுதினிகம், ரதிதேவி சண்முகராஜா, 6-00 மணிக்கு- செல்வி இராசரத்தினம் சுப்பிரமணியம், 6.45 வயலின் - செல்விகள் யோகாம்பிகை மொன்னுத்துரை, ஜெயலக்ஷ்மி திருவாலவாயன், ரஞ்சினி சிவகணேசன், 7-15 பாட்டு— செல்வி நாகம்மா சின்னத்தம்பி 8-00 தலைமையுரை — வழக்கறிஞர் திரு. கனகரத்தினம், 8-15 பாட்டு - செல்வி ஞானகுமாரி தங்கராசா, 9-00 -10-30 சிறப்பு நிகழ்ச்சி பாட்டு- திருமதி சரஸ்வதி பாக்கியராசா.

இல்லவிளையாட்டுப் போட்டி

ஏழாலை, திங்கள்

ஏழாலை அகிலர் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி அடுத்தவாரம் இறுதிப் பகுதியில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. ரத்நாயக்கா கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

களனி, மாணிக்க, மகாவலி ஆகிய இல்லங்களுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்காக வேண்டி வித்தியாலய விளையாட்டு ஆசிரியர் திரு ஜே. செந்தமரராஜன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

தாலிக் காணி வழிப்பறி

யாழ்ப்பாணம், செவ்வாய்

குமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை முகமூடியிடம் வழிப்பறி செய்தனராம். இச் சம்பவம் சுன்னாகத்தில் நடைபெற்றது.

சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கிக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இம் மூதாட்டியை மூவர் அணுகி ஏதோ பேசிக் கொண்டு சென்றதாகவும் பின்னர் தாலிக்கொடியை அறுத்து கொண்டு ஓட்டம் பிடித்ததாகவும் தெரிகிறது.

15-வது வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம் செவ்வாய்

ஞானம் தொண்டர்புச் சேவையாளர்சங்க யாழ் கிளையின் 15 வது வருடாந்த கூட்டம் இம் மாதம் 26ம் திகதி காலை யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் இராசினாமாக்கெடுப்புமூலம் தெரிவு செய்யப்படுவர்.

வழக்குரைஞராக மத்தியப்பிரமாணம்

கல்லியங்காடு, திங்கள்

நல்லூரைச்சேர்ந்த திரு. க. சேரன் யாழ் மாவட்ட நீதிபதி திரு வீரமந்திரி முன்னிலையில் வழக்குரைஞராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சட்டக்கல்லூரி இறுதித்தேர்வில் திறமைச் சித்தியடைந்த இவர் யாழ்பதில் நீதவானும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. எஸ். சுந்தரத்தின்கீழ் ஒரே புதல்வராவார்.

விவேகானந்த சபை நடத்திய

அ. இ. சைவசமய பாடப் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, திங்கள்

கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவரிடையே நடத்திய சைவசமயபாடப் பரீட்சையில் பாடசாலைப் பரிசிலைபெறும் மாணவர்கள் பெயர் பாடசாலைப்பெயர் விபரம் வருமாறு:

(முன் தொடர்ச்சி)

வத்தளாமூலை மகா வித்தியாலயம்: சோ. சதானந்தி, க. சுந்தரேஸ்வரி

சித்தாண்டி இ. கி. மி. த. க. வித்தியாசாலை: பொ. தேவகி, மு. குணவதி, பி. பேபி

சேனையூர் மகா வித்தியாலயம்: க. கிருபாதேவி

பெருந்தெரு விநாயகேஸ்வர வித்தியாசாலை: ச. ஜெயப்பிரியா, செ. குரியபிரேமா, இ. கலாதேவி

திருகோணமலை சஞ்சிமடம் மகாவித்தியாலயம்: ப. இராசரமணி, சி. விஜயலெட்சுமி

மெதடிஸ்த பெண்கள் மகா வித்தியாலயம்: இ. சாந்தினி, சீ. சந்திரதேவி

ஸ்ரீகோணேஸ்வரவித்தியாலயம்: க. உதயகுமார், க. மகேஸ்வரன், ஆ. பாஸ்கரன், ப. குமாரதேவன்.

ஸ்ரீசண்முகவித்தியாலயம்: சி. லோகநாயகி, பொ. சோதினாதேவி, த. கமலாசனி, சி. இரதிமலர், அ. உமாராணி

நிலாவெளி அ. த. க. பாடசாலை: ஆ. நிலவதி, ஆ. மோகனேஸ்வரி, த. பிரபா, க. பரமேஸ்வரி

மாத்தளை இந்து மகா வித்தியாலயம்: ச. பிரபாகரன், அ. ஜெயபிரகாஷ், வே. முருகேசன்

மாத்தளை பாக்கிய மகா வித்தியாலயம்: அ. இந்திரா, கு. லோவல்வி, ப. தனலக்சுமி, க. இராஜேஸ்வரி, அ. சுமதி, வே. பரமேஸ்வரி

பன்விலை அ. த. க. பாடசாலை: சி. மகேஸ்வரி, மு. புஷ்பவல்லி, பொ. ஜெயராசா

வத்துளாமர் சி. சி. த. க. பாடசாலை: ந. புஸ்பராஜா, ந. செல்வராசா

இந்து உயர்தரப் பாடசாலை: பொ. மல்லிகா, பொ. இந்திராணாத்தி, க. உமாதேவி, தி. இராஜேஸ்வரி, இ. தியாகராஜா

தலாத்தூஓயா அ. த. க. பாடசாலை: கு. வாசேன், இ. ஜெகசோதி, க. சந்திரதேவி, ந. சிவஞானம், த. மோகேந்திரா

மோபிறே கல்லூரி பொ. சரோஜா, க. மோகேஸ்வரி

தெல்தோட்டை அ. த. க. வித்தியாசாலை: து. கங்கா செல்வி, கா. குணரரத்னம், செ. பரஞ்சோதி, சி. நித்தியானந்தன்.

கதிரேசன் தனிஷ்ட வித்தியாலயம்- கு. சேதுபதி, கு. நந்தகுமார், க. நடராசா, க. சுப்பிரமணியம், வி. ஜெகதீசன் பரி. அந்திரேயா மகளிர் மகா வித்தியாலயம்- ரா. மகேஸ்வரி, இ. நிருபமேஸ்வரி, இ. மகிழமேஸ்வரி நாவலப்பிட்டி கனிட்ட மகளிர் வித்தியாலயம் - ச. சுபராஷினி, ம. நாகஜெயந்தி, இ. இராஜலெட்சுமி, வைஷ்ணவி கல்லூரி- க. பிரியரஞ்சினி, ரா. செல்வராணி, இ. நிலவதி, சி. கலைமகி, புனித கபிரியேல் மகளிர் மகா வித்தியாலயம் - மு. மகேஸ்வரி. இ. புஷ்பலீலா, கு. சுவர்ணலதா, பெ. கலைராணி, புனித ஜோசப் கொன்வெண்ட் கல்லூரி- சி. சற்குணராஜ், மு. மோகனராஜ் பன்மூர் அ. த. க. பாடசாலை- க. விமலாதேவி, பெ. கமலாதேவி, சி. ஞானசேகரன், பெ. குமரேசன். ஹோலிரோஸறி அ. த. க. பாடசாலை- பொ. வரைப்பிரமணியம், வெ. தனலெட்சுமி, வே. மோகனராஜ், சி. சதாசிவம் பெ. இராசம்மா மன்கெலியா அரிச்சுனா யப்பர் த. க. பாடசாலை-பெ. சுப்பிரமணியம், ஆ. மகாலட்சுமி, க. புஷ்பராணி பெ. வசந்திராதேவி. நடுக்கணக்குத் தோட்டம் பாடசாலை- ஆ. சிறீலா பொ. சந்திரகுமார், ஆ. ஜுனுக்கா தமிழ் மகா வித்தியாலயம் வ. ஜெயகுமாரி. வதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம் - ச. சுவேதிரினி, ச. சசிலா, ஆ. சாந்தினி எட்டியாந்தோட்டை புனித சேவியர் தமிழ்ப் பாடசாலை- இ. புஷ்பராசா, வி. பாலச்சந்திரன் இரத்தினபுரி க. த. க. பாடசாலை- து. தர்மராசா, ம. செல்வச்சந்திரன் வேலுகுமார். இ. அரிகரகுமார் கேகாலை வித்தியோதய தமிழ்ப் பாடசாலை- பொ. செல்சுந்தரி, ஏ. ஆரினர் தமிழ்ப் பாடசாலை- து. புவேந்திரகுமார். ருக்கலை ஆறாம் பாடசாலை- சி. நிலவதி, ருக்கலை ஆறாம் பாடசாலை- சி. நிலவதி, ருக்கலை தமிழ் மகா வித்தியாலயம்- ச. சண்முகம், மு. சிங்கராசா

(முற்றும்)

மகா வலி வெற்றி

ஏழாலை, திங்கள்

ஏழாலை அகிலர் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டியின் ஒரு கிளமாக இல்லங்களுக்கான ஆரம்பநிலைப் போட்டியில் மகாவலி இல்லம் 15—7, 15—3, 2—15, 15—6 புள்ளிகளால் மணிக்க இல்லத்தைத் தோற்கடித்தது.

வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஜனாப் எஸ். எம். இப்ருகீம் நடுவராகக் கடமை யாற்றினார்.

மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்மாவட்டம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய இல்லங்களின் மெய்வல்லுநர் ஆட்டப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பாடசாலைத் தலைமையாசிரியர் சைவப்புலவர் க. செல்வத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் வலிகாமம் கல்வி ஆலோசகர் திரு சி. பொ. சிவபாதம் விருந்தினராக கலந்து கொள்வார். முன்னாள் நிதி வட்டார கல்வியதிகாரி திரு சி. ஆலோசியஸ் கொடி வேற்றிவைப்பார்.

'வேலையில்லாத் திண்டாட்டம் விரட்டப்படும்'

வல்வெட்டித்துறை, திங்கள்

'மாணவர்களின் வருங்காலத்தை உத்தேசித்து அரசாங்கம் புதிய கல்வித் திட்டத்தை தொடங்கியுள்ளது. படிப்படியாக இக்கல்வித் திட்டம் விரிவடைந்து மாணவர் அறிவும் தொழில் அறிவும் விசாரித்து சுதந்திர வேலையில்லாத் திண்டாட்டம் ஓர் ஆண்டு நாட்டை விட்டு அகற்றப்படும்' என்று இன்று சித்திரித்தார் பாடசாலையில் விவசாய விஞ்ஞான கழகத்தை ஆரம்பித்து வைத்த வட்டார கல்வியதிகாரி திரு சே. நவரத்தினம் தமது உரையில் கூறினார்.

அதிபர் திரு எஸ். விரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் விவசாய விவரக்கண்காட்சியை திருமதி கமலாம்பிகை, விவசாய ஆசிரியர் திரு. செல்லையா ஆகியோரும் பேசினர்.

கணவனைக் கொன்றதாக...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

மகள் சாட்சியம்

எதிரியினதும் கொலையுண்டோர்தம் மகளான ஜூத்திரா தேவி (வயது 16) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் என் தகப்பனார். எதிரி என் தாயார் சம்பவம் நடந்த நாள் ஞாபகமிருக்கிறது. அன்று கலைவிழா நடந்தது. அன்றிரவுதான் ஐயா இறந்தார். எங்கள் வீடு ரோட்டுக்கரையில் இருக்கிறது. எவ்வளவு 8 ஏக்கர். தென்னை, பனை, வாழை, தோட்டை எலுமிச்சை போன்ற மரங்கள் உண்டு. தகப்பனார் எங்களை நன்றாக வளர்த்தார். அம்மா ஒரு தொழிலும் செய்யவில்லை.

இரவில் படுக்கப்போகும் போது முன் படலையை எட்டு போய்; பூட்டுவதில்லை.

வழ: உமக்கு எத்தனை சகோதரர்கள்?-3 சகோதரர்களும், 3 சகோதரிகளும்.

வழ: மூத்தவர் அண்ணன்?- ஆம்.

வழ: கடைசிப் பிள்ளைக்கு என்ன வயது? 3 வயது.

வழ: கலைவிழாவுக்கு அண்ணன் முதலில் போனார்?- ஆம்.

வழ: எத்தனை மணிக்கு?- 6 மணிக்கு.

வழ: அம்மாவுடன் நீங்கள் எத்தனை மணிக்குப் போனீர்கள்?- 6-30 மணிக்கு

நீதிபரசர்: இரவு முழுவதும் அம்மா உங்களுடன் இருந்தாரா?- ஆம்.

வழ: கலைவிழா என்றால்?- நாடகம், கலை நிகழ்ச்சிகள்.

நீதிபரசர்: விடிய 6 மணி வரை விழாவா?- ஆம்.

வழ: அண்ணனும் இரவு முழுவதும் இருந்தார்?- ஆம்

கலைவிழா முடியும்வரை அம்மா எம்முடன் இருந்தார்

அன்று கலைவிழாவிற்கு 6 மணிக்குப்போனோம். பெரிய அண்ணன் முதலில் போனார். அதன்பின் நாங்கள் போனோம். வீட்டில் ஐயா மட்டும்தான் இருந்தார். நாங்கள் கலைவிழாமுடிந்த பின் 6 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். வீட்டிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் கலைவிழா நடந்தது. வீட்டில் ஐயா இறந்து கிடந்தார்.

தயாரின் சேலை

எங்கள் வீட்டில் சோடனி ஒருவளவும் இருக்கவில்லை. இப்படியான மண்வெட்டி எங்கள் வீட்டில் இல்லை. பெரிய மண்வெட்டிதான் உண்டு. [சோர்வடைந்து செப்பு சேலை காட்டப்பட்டது] இதை தயாருடைய சேலை. மண்வெட்டி சோடனி எங்கள் இணற்றிலிருந்து எடுத்தோம் இப்போ தெரியும் அறையை எடுக்கும்போது நான் இருக்கவில்லை. இந்தச்சேலை வீட்டிலிருந்து எடுத்தது எனக்குத் தெரியும் மண்வெட்டி சோடனியிலிருந்து எடுத்தது தெரியாது.

பொலிசார் சாமான்களை எடுக்கும்போது நான் நின்றேன். இந்தச்சேலையை எடுப்போது அம்மா உடுத்திருந்தார். வேறுசேலையைக் கட்டிக்கொண்டு இந்தச்சேலையை அம்மா இன்னொருவரிடம் கொடுத்தார். இன்னொருவர் வீட்டிற்கு வந்த போது அம்மா இந்தச் சேலையை உடுத்திருந்தார்.

குறுக்குவிசாரணை

எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ந. தம்பிராஜாவும் குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: உமது தகப்பனார் குடிக்கிறவரா?- ஆம்.

வழ: அவரவர்களுடன் எப்படி?- ஐயா ஒருத்தருடனும் கதைப்பதில்லை.

வழ: உமது தகப்பனாருக்குச் சகோதரி உண்டு?- 2 பேர் உண்டு. ஒருவர் அவரிடம் வசிக்கிறார்.

வழ: உமது மாமி வீட்டுக்கு வருவாரா?-இல்லை.

வழ: எவ்வளவு காலமாக வருவதில்லை?-3 வருடமாக.

வழ: உமது தகப்பனாருக்கும் மாமிக்குமிடையில் ஏதாவது சம்பவம் நடந்ததா?-சண்டை நடந்தது. அதனால் வருவதில்லை.

வழ: அவர் வீட்டில் பிரமணர்கள் இருந்தார்களா?- ஆம்.

வழ: உமது தகப்பனாருக்கும் அங்குள்ளவருக்கும் ஏதாவது சம்பவம் நடந்ததா?- ஆம்.

வழ: தகப்பனாருக்குப் பல எதிரிகள் இருந்தார்களா?- ஆம்

நீதிபரசர்: கலைவிழா முடியு வரை அம்மா உங்களுடன் இருந்தாரா?! ஆம்!

நீதிபரசர்: வாகனியில் எவரோடு கூடி வந்தீர்கள்?- ஆம்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்தையா, டாக்டர் முருகேசு வேலும்மயிலும் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் ஏமனதாக எதிரி கற்றவளியெனத் தெரிவித்ததைத்தொடர்ந்து நீதிபரசர் எதிரியை விடுதலை செய்தார்.

இசைமணிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செப் ஆயிரம் கச்சேரிகளுக்கு மேல் செய்த பக்திப்பாடகர் இசைமணி ஏ. ஆர். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக இம்மாதம் 27-ம் திகதி மாலை யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனைமண்டபத்தில் பாராட்டுவைபவம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. சங்கீதபூஷணம் திரு. ராமகுமாரசாமி தலைமையில் இப் பாராட்டு வைபவம் நடைபெறவிருக்கிறது.

.....

பீடி பற்றியவர்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுந்ததாலும் அவர் படுத்த இடத்தில் நெருப்பெரியவே நீருற்றி நெருப்பை அணைத்துவிட்டு எவ்வாறு நெருப்புப்பற்றியது என வினவியபொழுது பீடி பற்றும்போது நெருப்புப் பற்றியதாகக் கூறியதாலும் உடனே வைத்தியர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாலும் அதிகு இரவு மரணமானதாலும் தெரிவித்தார் வைத்திய அதிகாரி செல்வி செ. செல்வமணியின் சாட்சியத்தையடுத்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு எஸ் பரிமணராஜன் நற்செயலாக ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

—

இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 11ந் திருவிழாவான இன்று மாலை 6 முதல் 7-30 மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதன் தம்பிரானின் 'சுந்தரலஹரி' தொடர் பிரசங்கமும், இரவு 8:30 முதல் 9-30 மணி வரை செல்வி ஜயதேவி நவரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும், சுவாமி பூங்காவனத்திருவீதி வலமும் நிகழும்.

.....

புத்தளம், திங்கள் புத்தளம் வலிடாரத்திலுள்ள 16 வயதிற்குட்பட்டவர்களிடையே நடைபெறுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புத்தளம் 'வலிண்டார்ஸ்' உதைபந்தாட்டக் கழகமும், புத்தளம் 'நிறீன்டார்ஸ்' உதைபந்தாட்டக் கழகமும் மோதின. இப்போட்டியில் புத்தளம் 'திறீன்டார்' உதைபந்தாட்டக் கழகம் 2—0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி புத்தளம் நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. போட்டியை நடுவராக ஜனாப். மார்ஸோ கடமையாற்றினார்.

—

பனை ஓலை கைத்தொழில் நிலையம்

கழிபுரம், திங்கள் மாதகல் மற்கு சனசமூகநிலைய வாசிகசாலைக் கட்டுமானமாகிய பனையோலை கைத்தொழில் நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது. மாதகல் மேற்கு சனசமூகநிலையத் தலைவர் இந்நிலையம் நடாத்தப்படுகிறது.

அதிக தேயிலைவாங்க இந்த நாடுகள் முடிவு

கொழும்பு, திங்கள் இலங்கைத் தேயிலையை வழமையாக வாங்கிவரும் நாடுகள் இந்த ஆண்டில் அதிக தேயிலையைக் கொள்முதல் செய்வதாக அறிவித்துள்ளன.

சராசரி 5 கோடி 50 லட்சம் ரூத்தல் தேயிலை வாங்கி முடிவுசெய்துள்ளது. சராசரி முதல்வர் நமது தேயிலை மார்க்கெட்டுக்கு வந்தபோது 2 கோடி 9 லட்சம் ரூத்தல் மாத்திரமே வாங்கியது. ஆனால் காலப்போக்கில் அது கொள்முதலை அதிகரித்துக் கொண்டது.

மாகிஸ்தான் சமீபகாலத்தில் 5 கோடி ரூத்தலாக அதிகரித்துக்கொண்டது.

ஆகாதார சீர்கேடு

யாழ்ப்பாணம், செவ்வாய் 'யாழ்-நகரில் நிலவும் ஆகாதாரச் சீர்கேட்டுக்குத் தீர்வு கண்டபின்புதான் வேறான கதைகளைத் தடுக்கலாம்' இவ்வாறு இலங்கைப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சமூக நிலையங்களின் சமரசவாழ்வு இணைச் செயலாளரும் மான திரு. சி. வரதராசா இலங்கைப் பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய சங்க யாழ் கிளையின் நடாத்திய பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

கொழும்புத் துறை சனசமூக நிலைய வாசிகசாலை நிர்வாகத்தவர்கள் முயற்சியால் நடாத்தப்பட்ட இக்கூட்டத்தில் கொழும்புத்துறை துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு விழாவுக்கு எதிரும், நிலைய முன்னாள் செயலாளருமான திரு இ. செல்வராசா தலைமை வகித்தார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் 'இன்று யாழ் நகரில் உள்ள பொது மலசலகூடங்கள் தப்புரவாகக் கருதி எரிக்கப்படுவதில்லை. நகர் ஒழுங்காகக் கூட்டப்படுவதில்லை. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மக்கள் குப்பைகளை வீசுகின்றனர். நகர வாய்க்கால் துர்நாற்றம் வீசுகின்றன. இதனால் இப்பகுதிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

'சுகாதாரத்தில் சீர்கேடு இருக்கும் பொழுது எப்படி வயிரோக்கியத்தைத் தடுப்பது? காசநோயில் இருந்து மக்களைக் காப்பாற்றி உயிர்க்கேதுவாகக் குறைக்க வேண்டுமானால் சுகாதாரச் சீர்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்' என்றார்.

வயிரோக்கிய யாழ்ப்பாணக் கிளை அமைப்பாளர் திரு எக் ஆர் சரவணபவன், பிரதேச அமைப்பாளர் திரு நடராசா மற்றும் யாழ் மாநகர சபை உறுப்பினரும் உரையாற்றினர்.

—

எழுதுமட்டுவாளில் புகையிலை நோய்

எழுதுமட்டுவாள் திங்கள் பாலமட்டநோய் எனப்படும் ஒருவித நோய் இப் பகுதியிலுள்ள புகையிலைப் பயிரைப் பீடித்துள்ளது. ஏராளமான புகையிலைத் தோட்டங்களில் இந்நோய் பரவியுள்ளது. பல ஆயிரம் ரூபா செலவில் புகையிலை பயிரிட்டு கதர்காலத்தை எதிர்பார்த்திருந்த பயன் படுத்திய விவசாயிகள் புகையிலை வெட்டி உலர்த்தும் காலம் நெருங்குகின்ற போது இந்நோய் பரவியுள்ளதால் மிகவும் வேதனைப்படுகின்றனர்.

—

மானிப்பாயில்

ஒழுங்கைகள் அகலிப்பு

யாழ்ப்பாணம், செவ் மானிப்பாய் பகுதியை சபை எல்லைக்குட்பட்ட ஒழுங்கைகள் வாகனப் போக்குவரத்துக்கேற்ற வாறு அகலிக்கப்பட்டு வருகின்றன. மானிப்பாய் வடிவேலுவையின் முன்றும் வலிடாரா உறுப்பினர் திரு. எஸ். எதிர்மனத்தம்பியும், 4-ம் வட்டார உறுப்பினர் திரு. பொ. குணசிங்கமும் தங்மையில் இரண்டு வட்டாரத்திற்கும் எல்லையாய் அமைந்துள்ள விழப்பொலை ஒழுங்கையின் அகலமையில் கவனித்துள்ளனர்.

இவ்வொழுங்கைக்கு விரைவில் மின்சாரவசதி அளிக்க நடவடிக்கை எடுப்பதாக வடிவேலுவையிடம் தெரிவித்தனர் திரு எஸ். இராசேந்திரம் கூறியிருந்தமையாக நம்பப்படுகிறது.

—

போட்டிகள் நடத்த முடிவு

யாழ்ப்பாணம், செவ்வாய் உடுவில் தொகுதியிலுள்ள சனசமூக நிலையங்களின் செயலாளர்கள் கூட்டம் அண்மையில் மானிப்பாய் ஸ்ரீ பாரதி சனசமூகநிலையத்தில் அமைப்பாளர் திரு க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமரசப் போட்டிகளை யொட்டி உடுவில் தொகுதியில் உள்ள நிலையங்களிடையே நாடகம், நடனம், பேச்சு ஆகிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு முதலாம் திகதி நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வட்டாரத்தோறும் மக்கள் குழுக்கள் அமையவிருக்கும் இச்சமயத்தில் சனசமூகநிலையங்கள் எப்படி இயங்க வேண்டுமென்பதுபற்றி பூரணப்படுத்தப்பட்டது.

—

துப்புத்துலக்க குளம்துப்புரவு?

குடாநாடு, திங்கள் வலிகாமம் வடக்கு மானிப்பாய் இறந்த துப்புரவு செய்யப்படாத கிடந்த கல்லியக்காடு சந்திரசேகரப்பிள்ளையார் கோயிற் கேணி செத்த வாரம் பொலிசாரின் உதவியால் கலக்கி இறைக்கப்பட்டது.

அவரெட்டி கொண்டு சம்பந்தமாக சில துப்புகளை இந்தக் குளத்திலிருந்து அறிவலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே இக்குளம் இறைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

.....

ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச புத்தகம்

கழிபுரம், ஞாயிறு வண்டத்தரிப்பு கிராம சபைப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு பண்டத்தரிப்பு கிராமசபை இலவசபாடப்புத்தகம் விநியோகித்துள்ளது.

களைக்குடியேற்ற தடுப்பு மகாநாடு

இலங்கை இந்திய அதிகாரிகள் கலந்துகொள்வர்

கொழும்பு திங்கள் இலங்கையில் களைக்குடியேற்றம் பற்றிய மகாநாடு ஒன்று (இன்று) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

இம் மகாநாட்டில் இலங்கை இந்திய ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொள்வர். இலங்கைக் கரையோரப் பகுதிகளிலிருந்து குடியேற்றத் தடுப்பு உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் குரு. வன்டேர தலைமையிலான ஐம்மகாநாட்டுக் குழுவினர், கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

இம்மகாநாட்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் களைக்குடியேற்றத்தைத் தடுப்பதில் இரு நாடுகளும் எவ்வாறு தடுப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தலாமென்பது பற்றி ஆராயப்படுமெனத் தெரிகிறது.

ஆரம்பக்கல்வி

புதிய பாடத் திட்டம்

கொழும்பு-திங்கள் இலங்கையில் முதலாம் வகுப்பிலிருந்து 5ம் வகுப்பு வரைக்கான ஆரம்பக் கல்வித்திட்டத்தமான புதிய பாடத்திட்டம் அமுல்நடத்தப்படவிருப்பதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான புதியபாடத் திட்டம் குழந்தைகளின் மனப்போக்கு ஆயிரைவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனை கல்வி அமைச்சின் பாடவிதான ஆயிருந்திச் சபை வகுத்தி ப்பதாகவும் கூறிய அவ்வதிகாரி பரிசார்த்தமாக இப்பாடத்திட்டம் முதலில் 350 பாடசாலைகளில் அமுல் நடத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

மணிவாக்கு

முன்னேறவேண்டுமாயின் போராட்டம் அவசியம்
இன்றேல் வாழ்க்கை குலைந்தது போராட்டத்தால்
நம் பலம் அதிகரிக்கிறது. ஆத்மீகப் போராட்டத்தில்
முடிவு அன்புதான். -- சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வாரத்தொறும் செவ்வாய்க்கிழமை வெளியாகும் தமிழ்த் தினசரி வாரம்
8-ந் திகதி (11-8-78)

கடும் தண்டனை வேண்டும்

விதிமீறி சென்று கொண்டிருந்த வெளிநாட்டுக்காரர் ஒருவரின் வகுப்படிவாரத்தை வழிப்பறி செய்ததுடன் அவருடைய மணப்பையைக் கொல்லையடிக்க எத்தனித்ததாகவும் அவரைக் கத்தியால் குத்திக் காயம் விளைவித்ததுடன் அவருக்கு உதவிக்குச் சென்ற ஒருவருக்கும் காயமேற்படுத்தியதாகவும் இருவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கொன்றில் அவர்களுக்கு ஆக்கூடுதலான தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறார் கொழும்பு மேலதிக மாஜிஸ்ட்ரேட். ஒரு வருடம் ஒரு மாதக் கடூழியச்சிறைதான் ஆக்கூடுதலான தண்டனையாகும். இதற்கு மேலுக் கடுமத் தண்டனை விதிப்பதற்கு சட்டம் இடம் கொடுத்திருந்தால் நீதிபதி விதித்திருப்பார். இத்தண்டனை வழிப்பறி, கொள்ளை, காடைத்தனம் ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

உள்ளூர்ப் பிரயாணத் துறையை விருத்திசெய்து அதன்மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பெரும் செலவு செய்து நிதிரமுதற்கு செய்து வரும் இச்சமயத்தில் வெளிநாட்டவர் அச்சமின்றி வெளியே செல்ல முடியாதபடி காடைத்தனத்தின் அட்டகாசம் இருந்தால் உள்ளூர்ப்பிரயாணிகளை இங்கு எப்படி எதிர்பார்க்கலாம்!

வழிப்பறி, கொள்ளை, காடைத்தனம் ஆகிய சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துவருகிறது இவ்வழக்கு சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக்காரர் காடையரின் பிடியில் சிக்கிக்கொண்ட சமயம் அவரது அதிர்ஷ்டம்காரணமாக உதவி கிடைத்தது. நல்லதருணத்தில் உதவி கிடைக்காமல் எத்தனை பேர் பொருள்களை இழந்திருக்கின்றனர்.

கொழும்பு நகரிலும் சரி இதர பகுதிகளிலும் சரி பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுவதுடன் சமூக இயக்கங்கள் சேர்ந்த தொண்டர்களும் சமூக விரோதச் சக்திகள்மீது கவனம் செலுத்தவேண்டியதும் அவசியமாகும். இதேசமயம் காடைத்தனம், கொள்ளை, வழிப்பறி ஆகிய தீய செயல்களில் ஈடுபடுவோருக்கு மிகவும் கடும் தண்டனை விதிக்கக்கூடிய முறையில் சட்டவிதிகளைத் திருத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இந்தமாதிரி குற்றங்களுக்கு மரண தண்டனை விதித்தாலுங்கூட மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்!

பூச்சிகள் தொல்லை !

தென்னை மரங்களை அழித்துவரும் பூச்சிகளின் தொல்லையை ஒழித்துக் கட்டுவதற்கு சரியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்றும் பலாவும் தென்னையும்தான் எமது மக்களைப் பாதுகாத்து வருகிற தென்றும் முன்னாள் பிரதமரும் தோட்டச் செய்தக்காரருமான சேர் ஜோன் கொத்தலாவலை சரியாக எடுத்துக் கூறியிருக்கிறார். தென்னைகளை அழித்துவரும் பூச்சிகள் எப்படி இங்கு வந்து சேர்ந்தன என்பது பற்றி அறிவதிலும் இந்தப் பூச்சிகளை அழித்தொழிப்பதற்கான முயற்சியிலும் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களையும் வரவழைத்து முயற்சி செய்தது.

வெளிநாட்டு நிபுணர்கள் மட்டுமல்ல நம் நாட்டு நிபுணர்களும் கூட இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த நாசகாரப் பூச்சிகள் இங்கு எப்படி வந்தன என்பதைக் கண்டுபிடிப்பதுடன் இவைகளை அழித்தொழிக்கவும் வழிகாணப்படவேண்டும். இது வந்த பின் காக்கும் நடவடிக்கைதான்.

இதேசமயம் நெடுப்புக் காய்ச்சல்வராமல் தடுப்பு ஊசி போடுவது போன்றும் ஆண்டைநோய் வராமல் பால் குத்துவது போலவும் இதுவரை இப்பூச்சிகள் படையெடுக்காமலுள்ள பகுதிகளிலுள்ள தென்னைமரங்களைப் பாதுகாக்க தடுப்புநடவடிக்கை மேற்கொள்ளவும் முயற்சி செய்யப்பட வேண்டும். பனை மரங்களையும் இப்பூச்சிகள் தாக்காமலென்ன அச்சம் தெரிவிக்கப்படுகிறபடியால் பனைத் தொழிலிலுந்திலிருக்கவனம்செலுத்தப்படவிருக்கும் இச் சமயத்தில் பனைகளையும் பூச்சிகள் தாக்காமல் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

அரவம் தீண்டி மரணம்

வவுனியா, திங்கள்

வவுனியா தச்சங்குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின்தாய் ஒருவர் பாம்பு தீண்டியதனால்மரணமானார்.

வேலாண்மை அறுவடை செய்யும்போது பாம்புகடித்ததாம்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். பத்மநாதன் பாம்பு தீண்டியதனால் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளித்தார்

வாழ்க வையம், வாழ்க வேதம் வாழ்க தீ! தீ! தீ!

நல்லூரில் நடைபெற்று வரும் சிவமகாயாகம் இன்று செவ்வாய்க்கிழமை முடிவடைகிறது. தினசரி ஏராளமான மக்கள் வந்து தரிசித்திருக்கிறார்கள். இதுவரை இந்த மாதிரி காட்சியை யாழ்ப்பாணத்தில் கண்டதில்லை என்றும் ஜந்தகுரு சுவாமிகள் யாகத்தை நடத்தியவர்களும் முறை வேதாள முனிவர்களை ஞாபகப் படுத்துவதாகவும். மனதிலுள்ள அழுக்குகள் நீங்கி, மனம் புனிதமும் புதிய பலமும் பெறுவதாகவும் வானுலகம் பூவுலகுக்கு வந்ததுபோல் உணர்வதாகவும் ஓர் அன்பர் தெரிவித்திருக்கிறார்.

இன்று நண்பகல் 12 முதல் 1 மணிவரை பூர்ணாகுதி. நடேசர் அபிஷேகம், தீர்த்தப்பிரசாதம். நாளை புதன் கிழமைதான் தானம் நடைபெறுமென்று அறிவித்துள்ளனர். யாகம் நடைபெறும் நாட்களில் அகண்ட சிவநாம பஜனையும் இரவில் இசை அரங்குகளும் நடைபெற்றவருகின்றன. நேரில் பார்த்துப்பயன் பெற இது நல்லதருணம். இனிஎப்போ இவ்விதவேள்வி நடைபெறப் போகிறதோ!

பொதுமக்களிடம் பலர் யாகத்துக்கான நெய், முதலிய வற்றையும் பணத்தையும் கொடுத்துதவுகின்றனர். இதையெல்லாம் கேட்கும்போது மகாகவி பாரதியாரின் வேள்விப்பாட்டு.

ஆத்தி தோறும், ஆத்திபகவான் முதலிய சமித்தைக் நினைப்புக்கு வருகின்றன. ஆதில் சிலவற்றைப் பார்ப்போம்.

எம்முயிரானவளும்-எங்கள்
இசைகளும் பலங்களும்
துணிவுகளும்,
செம்மையுற்றிட
அருள்வாய் நின்றன்
சேவடி தலைக்கணி
புகுந்து விட்டோம்
மும்மையின் உடலைகளும்
திரு
முன்னவிட்டஞ்சலிசெய்து
நிற்போம்
அம்மை நற்சிவ சக்தி
சமை
அமரர்நற்றிருமேனி
வாக்கிடுவாய்

0 0 0

உடலுயிர் மேல் உணர்
விலுற்றி
ஒன்றிவிட்டானவே இந்நேரம்
கடவுளர் நாம் எம்மை
வாழ்த்திக்
கைகொடுத்தாரே-
இந்நேரம்

0 0 0

வாழ்க்தேனர் வாழ்க்வேல்வி
மாந்தர் வாழ்வாரே
இந் நாம்
வாழ்கவையம் வாழ்க
வேதம்
வாழ்க தீ! தீ! தீ இந்நேரம்
நெஞ்சிற் கவலைகள்
நோவுகள் வாலையும்
நீக்கிக் கொடுப்பவனே.
உயிர்

0 0 0

அச்சமும் தயருமென்றே
இரண்
டகரர் வந்தெமையிக்கு
சூழ்ந்த நின்றார்
அச்சமிலீவோர்
பலடகள்-பல
தொல்லைகள் வைகுகள்
சாவுவரும்
இச்சையுற் றிவரடைந்
தார்-எங்கள்
இன்னமுதைக் கலந்
தேகிடவே
பிச்சையிக் கொண்டிந்
தாய்-ஒரு
பெருநகருடாலனும்
பெயரினதாம்
கேட்கிப்பாட்டு

அடுத்து "ஆத்தி தோமம்" (தீ) எனும் தலைப்பில் பாடியுள்ளவற்றில் இரண்டொன்றைப் பார்ப்போம்.

விஷங்கள்-எங்கள்வேல்விக்
கடமிதில்
ஏறுமே தீ! தீ- இந்நேரம்
பகைமுற்றே பேய்க
ளோடப்
பாயுமே தீ! தீ! இந்நேரம்

நீசத்தருபவனை-ஒளிர்
நேர்மைப் பெருக்கானவை-
நித்தம்
அஞ்சல் அஞ்சேலென்று
கறி வெகுக்கு நல்
ஆன்மை சமைப்பவனைப்-
பகைவெற்றிகள்
ஆக்கிக் கொடுப்பவனைப்-
பெருந்திரள்
ஆகிப் பணிந்திடுவோம்-
வாரீர்!

சேரனதிலே பகிடம் எனினும் ஊரிக் ராமநாதனை ஐயாயிரம் தடவைகளுக்குமேல் எழுதி சமர்ப்பித்த 100 மாணவர்களுக்கு காஞ்சி காமகோடி பீட புதுப் பெரியவரால் தெய்வீக சக்தியைப் பரிசளித்தார், ஒரு முஸ்லீம் மாணவரும் ஒரு கிறீஸ்தவ மாணவரும் இப்பரிசைப் பெற்றதுகுறிப்பிடத்தக்கது.

பிரதமர் ஏற்றார்

கொழும்பு, திங்கள்

இலங்கை கடல் வர்த்தகத்தில் புதியதொரு சகாப்தம் நேற்றுக் காலை கப்பல் கவிழ்ந்தபனத்தில் இரண்டாவது கப்பலான 'லங்கா சாகரா' முதலாவது விமான மூலம் கப்பலாக பதிவுசெய்யப்பட்டதோடு ஆரம்பமாகியுள்ளது.

1971-ம் ஆண்டு விமான மூலம் கப்பல் சட்டத்தின்கீழ் 'லங்கா சாகரா' பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதமர் திருமதி பண்டாரநாயகா இக்கப்பலை முறைப்படி சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொண்டார். இவ்வைபவத்திலே கப்பல்துறை அமைச்சர் திரு. கலுகல்லவும் கலந்துகொண்டார். 'லங்கா சாகரா' ஏற்கனவே ஐரோப்பிய வர்த்தகத்தில் ஈடுபடுத்துள்ள லங்காராணியுடன் இணைந்து சேவையில் ஈடுபடும். (ச)

புனர்வாழ்வு கண்காணிப்பு கமிட்டிகள்

கோட்டை, திங்கள்

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் பிரதேச புனர்வாழ்வு கண்காணிப்பு கமிட்டிகளை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது!

புனர்வாழ்வு முகாம்களிலுள்ளவர்களையும் பயங்கரவாதம் சம்பந்தமாக சிறைக்கனுப்பப்பட்டுவிடுதலையானவர்களையும் கண்காணிக்கவே மேற்படி கமிட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

புனர்வாழ்வு வேலைகளுக்கு பொறுப்பாகவுள்ள ஆட்சி மன்ற விவகார விநியோகிப்பு அமைச்சர் திரு கே. பி. ரத்நாயக்கா தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கமிட்டிகளை அமைப்பதற்கான உத்தரவு அரசாங்க அதிபர்களுக்கும் காரியாதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

'நாட்டின் நன்மைக்காக சேர்ந்து வாழ்வோம்'

— அஸீஸ், எம் பி

கொழும்பு, திங்கள்

இன்றைய நிலைமையில் இன ஒருமைப்பாடு மிகவும் அவசியமாகும் எனவே நாம் அனைவரும் நாட்டின் நன்மையைக் கருதி சிங்களவர்களோடு ஒற்றுமைப்படுவதற்கு முன்வரவேண்டும்.

நீலமன எம் பி யும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான ஜனாப் ஏ. அஸீஸ் இவ்வாறு கூறினார்.

கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் நடந்த கூட்டத்தில் ஜனாப் அஸீஸ் பேசினார்.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் இன்று நிலவும் சமூக ஒற்றுமையைக் குலைப்பதற்காக சில குறுகிய மனப்பான்மை கொண்ட தலைவர்கள் அழுவுக்கு வழிகோலும் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள், என்று குறிப்பிட்ட ஜனாப் அஸீஸ், இந்த பிரசாரங்களால் தோட்டத் தொழிலாளர்கள் அழிதலுறக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த அரசாங்கம் சிறுபான்மையோரின் உரிமைகளைப் பறிக்கவிடவோ பறிக்கவும் செய்யாது ஆனால் முன்னாள்வர்க்கத்துக்கு எதிராகவே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. என்றும் மிருக்கின்றது. என்றார் அவர். (ச)

இலங்கை-தேஷ் பொருளாதார ஒத்துழைப்பு

கோட்டை, திங்கள்

புதிய பங்களாதேஷ் அரசுடன் ஸ்திரமான பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்த இலங்கை நிர்ணயித்துள்ளது

திட்ட வேலைப்பிரிவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் டாக்டர் எச் ஏ டி எஸ் குணசேகரா ஏப்ரல் முதல்வாரத்தில் இந்த பொருளாதார ஒத்துழைப்புச்சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்த பங்களாதேஷுக்கு விஜயம்செய்யவுள்ளார்

அதற்கு டாக்டரின் தலைமையிலான பேராசிரியர் நூருல்இஸ்லாமை டாக்டர் குணசேகரா சந்தித்த இலங்கை பங்களாதேஷ் பொருளாதார ஒத்துழைப்புப்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சந்தைப்படுத்துவது குறித்தும் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்களெனத்தெரியவருகிறது

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் பிரசுரமாக நாராயண் வாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.